People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**01.3.2011**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்**
**தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்**
**அண்ணாசாலை**
**சென்னை 60002**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு**

**மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.**

**மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 15 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.**

**எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 19.2.2011 முதல் 28.2.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.**

## 19-2-2011 முதல் 28-2-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 1 |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 35 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 7 |
| 5. | வகுப்பறை வன்முறை | 13 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 9 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 7 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 1 |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | – |
| 11. | குழந்தை திருமணம் | – |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 5 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | – |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | 2 |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | – |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 2 |

| | | |
|---|---|---|
| 17. | மணல் கொள்ளை | 4 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | 1 |
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | 1 |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | 1 |
| 22. | பொதுவானவை | 2 |
| | மொத்தம் | 91 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்:

தமிழகத் துணை முதல்வர்

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

## 19.2.2011 முதல் 28.2.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 578. | 19.2.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே ஓடையில் அனுமதியின்றி மணல் அள்ளியவர்களைத் தடுத்த துணை தாசில்தாரைத் தாக்கி மணல் கொள்ளை. | மணல் கொள்ளை | தினத்தந்தி |
| 579. | 19.2.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் மத்திய சிறையில் சிறைக் கைதிகள் பாலாஜி, கோழிக்கடை கோவிந்தன் இருவருக்கும் நடந்த கேஷ்டி மோதலில் கைதிகள் இரு கோஷ்டிகளாக பயங்கர ஆயுதங்களுடன் மோதிக் கொண்டனர். | சிறைச்சாலை வன்முறை | தினத்தந்தி |
| 580. | 19.2.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் இ.எஸ்.ஐ.காலனியைச் சேர்ந்த மாடசாமி மகள் மகாலெட்சுமி(19) தனியார் மில்லுக்கு வேலைக்கு சென்றவர் சஞ்சீவிமலை அடிவாரத்தில் ஊரணி அருகே சாக்குமூட்டையில் சடலம் கிடந்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>கொலை | தினத்தந்தி |
| 581. | 19.2.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலத்தை அடுத்த கள்ளிக்குடியில் காரியாபட்டி அருகே உள்ள எஸ்.வெள்ளாகுளத்தைச் சேர்ந்த கருப்பையா(33) மனைவி வளர்மதி(28). கணவன் மனைவி குடும்பத் தகராறில் கருப்பையா போதையில் வளர்மதியை கத்தியால் குத்தி கொலை செய்ததாக கருப்பையா மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை<br>&<br>கொலை | தினத்தந்தி |
| 582. | 19.2.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் ஆலம்பட்டியைச் சேர்ந்த சிவக்குமார்(42) மனைவி நிர்மலா(31). சிவக்குமாருக்கு எய்ட்ஸ் இருப்பதும், ஏற்கனவே திருமணம் ஆனவர் என்பதையும் மறைத்து திருமணம் செய்ததாக சிவக்குமார் மீது நிர்மலா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 583. | 20.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஆரப்பாளையம் சண்முகம் பிள்ளை முதல் வது தெருவைச் சேர்ந்த கவிதா(40) தனியார் ஆரம்ப பள்ளியில் ஆசிரியையாக உள்ளார். மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டிருந்தார். அந்தவழியாக வந்த 2 மர்ம ஆசாமிகள் கவிதாவை கீழே தள்ளி 5 பவுன் நகையை கொள்ளை அடித்துச் சென்றதாக கவிதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 584. | 20.2.2011 | **வேலூர் மாவட்டம்:** பனப்பாக்கத்தைச் சேர்ந்த வெளிதாங்கிபுரம் மோட்டூர் கிராமத்தைச் சேர்ந்த மாயன் மனைவி கஸ்தூரி(35) மகள் துர்கா(15), லட்சுமி(9), மகன் ராமதாஸ்(9), கடன் தொல்லையால் மனமுடைந்த மாயன் தனது மனைவி மற்றும் குழந்தைகளுக்கு விஷத்தை கொடுத்து தானும் விஷம் குடித்தார். மனைவி மற்றும் குழந்தைகள் மரணம். ராமன் மருத்துவமனையில் அனுமதி. | கந்துவட்டிக் & கொலை & பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 585. | 20.2.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் செம்பட்டி அருகே எஸ்.புதுக்கோட்டையைச் சேர்ந்த சந்திரசேகரன்(43) மகள் தேவயானி(14) கொடைரோடு அருகே தனியார் பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வந்தார். பள்ளி வகுப்பறையில் தேவயானி மயங்கி விழுந்தாக தகவல் கிடைத்து உறவினர்கள் பள்ளிக்குச் சென்றனர். பெற்றோர் வந்தால் தான் தேவயானியை அனுப்பதாக பள்ளி நிர்வாகம் கூறியது. பெற்றோர் வந்து தாமதமாக பள்ளியில் சேர்த்ததால் சிகிச்சை பலனின்றி தேவயானி மரணம். | வகுப்பறை வன்முறை | தினத்தந்தி |
| 586. | 20.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சிலைமான் அருகே சக்குடியைச் சேர்ந்த அழகர் மனைவி பாண்டியம்மாள்(27). வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் பாண்டியம்மாள் தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 587. | 20.2.2011 | **கோவை மாவட்டம்:** மேட்டுப்பாளையம் ஆாங்கொம்பு பகுதியைச் சேர்ந்த மணி மகன் சவுடேஷ்(11). சிறுமுகை ஊராட்சி துவக்கப்பள்ளயில் 5ம் வகுப்பு படிக்கும் சவுடேஷ் சாலை விபத்தில் பலத்த காயத்துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் மூளைச்சாவடைந்ததாக மருத்துவர் கூறியதால் பெற்றோர் சவுடேஷ் உடல் உறுப்புகளை தானம் செய்தனர். மாணவனின் உடலை உடற்கூறு ஆய்வு மேற்கொள்ள லஞ்சம் கேட்டதால் உறவினர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். | லஞ்சம் | தீக்கதிர் |
| 588. | 20.2.2011 | **புதுக்கோட்டை மாவட்டம்:** புதுக்கோட்டை அரிமளத்தைச் சேர்ந்த செல்வி மின்சாரம் தாக்கி அரிமளம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அனுமதி. மருத்துவமனையில் 5 மருத்துவர் | மருத்துவர்கள் அலட்சியம் | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருந்தும் பணியில் ஒருவரும் இல்லாததால் சிகிச்சை இன்றி செல்வி மரணம். | | |
| 589. | 21.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** திருவள்ளூர் மாதர்பாக்கம் அருகே உள்ள N.S.K. நகரைச் சேர்ந்த சுப்பிரமணி மனைவி நிர்மலா(28). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த சுப்பிரமணி நிர்மலா மீது மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்தியதில் நிர்மலா மரணம். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் பாஸ்கர் |
| 590. | 21.2.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே கிடாரிப்பட்டியைச் சேர்ந்த பால்ராஜ்(32) மனைவி உஷாதேவி(22). கணவர் மற்றும் அவரது உறவினர்கள் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதோடு கொலை மிரட்டல் விடுத்ததாக உஷாதேவி புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினமலர் |
| 591. | 21.2.2011 | **சென்னை மாவட்டம்:** வேளச்சேரி அடுத்த ஜல்லடியன்பேட்டையைச் சேர்ந்த கிருஷ்ணன்(28) மனைவி சுபா(18). திருமணமாகி 3 மாதங்கள் ஆன நிலையில் சுபா தூக்கில் தொங்கிய நிலையில் மரணம். போலீசுக்கு தெரிவிக்காமல் சுபாவின் சடலத்தை புதைக்க முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 592. | 21.2.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** முதுகுளத்தூர் அருகே கீழச்சாக்குளம் கிராமத்தைச் சேர்ந்த கிழவன் மகன் துரைப்பாண்டி(35). ஆட்டோ ஒட்டி வந்தார். கொடுரமான முறையில் துரைப்பாண்டி கொலை செய்யப்படடார். கொலையாளியை கைது செய்யக்கோரி பிணத்துடன் பொதுமக்கள் சாலை மறியல். போலீஸ் தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 593. | 21.2.2011 | **மதுரை மாவட்டம்:** பொன்மேனி ராஜன்நகரைச் சேர்ந்த உதயகுமார் மகள் மதுபாலா(19) சிலைமானில் இன்ஜினியரிங் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்துவந்தார். அவரை மாமா மகன் கார்த்திக்(27), அவரது உறவினர்கள் 5 பேர் கடத்தியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 594. | 21.2.2011 | **மதுரை மாவட்டம்:** கள்ளிக்குடி அருகே உள்ள குளத்துவாய்பட்டி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் கனியம்மாள் மட்டுமே பணியாற்றி வந்தார். அவரும் இரண்டு நாள் விடுப்பில் சென்றதால் பள்ளி | வகுப்பறை வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பூட்டியிருந்தது. மாணவர்கள் படிப்பு பாதிக்கப்பட்டதாக புகார். | | |
| 595. | 21.2.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் கல்வராயன் மலைப்பகுதியில் உள்ள கிராம மக்களுக்கு சாலை வசதிகள் உடனடியாக செய்துதரப்பட வேண்டும் என தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம் போராட்டம். | பழங்குடியினர் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 596. | 21.2.2011 | **திருச்சி மாவட்டம்:** துவாக்குடி அருகே உள்ள அரசூரைச் சேர்ந்த சண்முகம் மகள் சங்கீதா(18) துவாக்குடியில் தொழிற்பயிற்சி பள்ளியில் இரண்டாம் ஆண்டு படித்துவந்தார். சங்கீதா வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தீக்கதிர் |
| 597. | 21.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** உடைகுளம் ஊராட்சிக்குட்பட்ட காட்டுப்புளி கிராமத்தில் 50 குடும்பங்கள் வசித்து வருகின்றன. 10 நாட்களாக குடிநீர் இன்றி பொதுமக்கள் தவிப்பு. | அடிப்படை வசதியின்மை | ஓ. ஆனந்தகுமார் தினகரன் (18.2.11) |
| 598. | 21.2.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி அருகே செட்டிநாடு அண்ணாமலை பாலிடெக்னிக் விளையாட்டு திடலில் 54 வயது பெண் மர்மமான முறையில் இறந்து கிடந்ததாக பொதுமக்கள் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | ஓ. ஆனந்தகுமார் (18.2.11) |
| 599. | 22.2.2011 | **தஞ்சை மாவட்டம்:** தஞ்சாவூர் கீழவாசல் காவடிக்காரத்தெரு வேல்முருகன் மகள் மணிஷா(3). உ.பி. மாநிலத்தைச் சேர்ந்த பிரகாஷ்(20) ஐஸ் விற்கும் இவர் மணிஷாவை கடத்திச் சென்று பாலியல் வன்முறை. தஞ்சை காவல் நிலையத்தில் புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | டெக்கான் கிரானிக்கல் |
| 600. | 22.2.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகரில் உள்ள முத்தால் நகர் பகுதியைச் சேர்ந்த முத்துகிருஷ்ணன்(48) மகள் புஷ்பவள்ளி(26) இவருக்கும் ஜெயப்பாண்டி என்பவருக்கும் 3மாதத்திற்கு முன் திருமணம் நடந்தது. கணவன் மனைவி குடும்பத் தகராறில் புஷ்பவள்ளி காவல் நிலையத்தில் புகார். இந்நிலையில் மனமுடைந்த முத்துகிருஷ்ணன் மற்றும் அவரது மனைவி பஞ்சவர்ணம், மகள் மகேஸ்வரி(24) புஷ்பவள்ளி 4 பேரும் விஷம் குடித்துத் தற்கொலை. காவல்துறை விசாரணை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தீக்கதிர் |
| 601. | 22.2.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசியில் உள்ள அரசு மருத்துவமனையில் | லஞ்சம் | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தீக்காய சிகிச்சை காயம் ஏற்பட்டு கட்டுப்போட வரும் நோயாளிகளிடம் ரூ. 50 கட்டாய வசூலிக்கப்படுவதாகவும், மதியம் சாப்பாட்டிற்கு ரூ. 20 வசூல் செய்யப்படுவதாகவும் புகார். | | |
| 602. | 22.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை அனகாபுத்தூர் பாலாஜி நகரில் வசித்து வரும் ரவிசந்திரராஜ்(65) மனைவி சத்யவாணி, மகன் ரமேஷ் மருமகள் அம்முகுட்டி, சந்திரராஜ் புரசை வாக்கத்தில் உள்ள அபி பைனான்சிஸ் சின்னசாமியிடம் கடன் வாங்கினார். கடனை திருப்பி செலுத்தவில்லை என சின்னசாமி அடியாட்களுடன் சென்று சந்திரராஜ், சத்யவாணி மற்றும் அம்முட்டியை அவதூறாக பேசியதோடு தெருவில் அடித்ததால் மனமுடைந்த மனமுடைந்த மனமுடைந்த மூவரும் தூக்கிட்டுத் தற்கொலை. | கந்துவட்டிக் கொடுமை & தற்கொலை | தீக்கதிர் |
| 603. | 22.2.2011 | **தேனி மாவட்டம்:** தேனி அனுமந்தன்பட்டி புனித சூசையப்பர் ஆர்.சி.நடுநிலைப்பள்ளி தாளாளரான பாதிரியார் பீட்டர் சகாயராஜ், பள்ளியில் பணிபுரியும் இடைநிலை உதவி ஆசிரியையிடம் செக்ஸ் டார்ச்சர் கொடுப்பதோடு தரக்குறைவாக பேசுவதாகவும், ஆசிரியை பாதிரியார் மீது புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 604. | 22.2.2011 | **மதுரை மாவட்டம்:** தமிழகத்தில் 12 மாவட்டங்களில் 213 கிராமங்களில் மேற்கொண்ட ஆய்வில், 104 கிராமங்களில் இன்னும் இரட்டை குவளைமுறை இருப்பதாக ஆய்வு அறிக்கை தகவல். | தலித்துகள் மீதான வன்முறை | தினமலர் |
| 605. | 22.2.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமநாதபுரம் ஆர்.எஸ்.மங்கலம் அருகே வரவணி ஊராட்சியைச் சேர்ந்த சீதா(55) தமிழக அரசின் இலவச வீடு வழங்கும் திட்டத்தில் பயனாளியாக தேர்வு செய்யப்பட்டார். இதற்காக வங்கி கணக்க துவங்கப்பட்டு 75 ஆயிரம் ரூபாயை ஐந்து கட்டமாக வழங்குவதாக கூறினார்கள். வங்கியில் சீதா செலுத்திய பணம் மாயமானதாக சீதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 606. | 22.2.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் அல்லம்பட்டி காமராஜர்புரத்தைச் சேர்ந்த மகேஷ்குமார் மனைவி சூரியகலா(29) பெண்கள் கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றி வந்தார். இருவருக்கும் திருமணமாகி 2 | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாதங்களே ஆன நிலையில் சூரியகலா தூக்கிட்டுத் தற்கொலை. | | |
| 607. | 22.2.2011 | **திருச்சி மாவட்டம்:** மணப்பாறையில் தனியார் மெட்ரிக் பள்ளியில் 9ம் வகுப்பு படிக்கும் கண்ணனை 10ம் வகுப்பு பாடத்தை படிக்க சொன்னதால் விரக்தியடைந்த 9ம் வகுப்பு மாணவன் மின் டவரில் ஏறி தற்கொலை முயற்சி. | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 608. | 22.2.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் பட்டிவீரன்பட்டியைச் சேர்ந்த செந்தில்மூர்த்தி(37) மனைவி ரமணி. கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக ரமணி புகார். கணவர் உட்பட 2 பேர் கைது. | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினகரன் |
| 609. | 22.2.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** கொடைக்கானல் சுற்று வட்டார பகுதியான பச்சூர், கடுகுதடி, வடகரை பாறை, ஊத்து, பண்ணைக்காடு பேச்சிபட்டி, தாண்டிக்குடி, பகுதிகளில் குடியிருக்கும் ஆதிவாசிகள் பட்டா வழங்க கோரி மறியலில் ஈடுபட்ட 150 பேர் கைது. | பழங்குடியினர் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 610. | 23.2.2011 | **நாமக்கல் மாவட்டம்:** நாமக்கல் தலித் சமூகத்தைச் சேர்ந்த நல்லையன். நல்லையன் மகன் சேகர் முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்த குல்சார்–ஐத் காதலித்து வந்தார். குல்சார் தந்தை ஷாஜகான், உள்பட நான்குபேர் நல்லையனை பொது இடத்தில் தீ வைத்து எரித்துக் கொலை. காவல்துறை புகார் வாங்க மறுப்பு. | தலித்துகள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | Express |
| 611. | 23.2.2011 | **நெல்லை மாவட்டம்:** பாளையம் கோட்டை கிருபா நகரில் உள்ள பட்டாசு ஆலையில் வெடிவிபத்து. 4 பெண்கள் தீக்காயங்களுடன் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை. | பெண்கள் மீதான வன்முறை & பட்டாசு ஆலை விபத்து | டெக்கான் கிரானிக்கல் |
| 612. | 23.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை அவினாசி ரோட்டில் ஜென்னி கிளப் ஹோட்டலில் மனிதக் கழிவுகளை சுத்தம் செய்ய தொட்டியில் இறங்கி சுத்தம் செய்த கோவை காமராஜர்புரத்தைச் சேர்ந்த ராஜாமணி மகன் அசோக்(17), அய்யாசாமி மகன் கார்த்திக்(21), கிருஷ்ணன் மகன் ஆனந்த்(24) விஷ வாயு தாக்கி மரணம். | தலித்துகள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 613. | 23.2.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் பேர்லாண்ட்ஸ் பகுதியில் உள்ள செயின்ட் ஜான்ஸ் மெட்ரிக்குலேசன் | வகுப்பறை வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேல்நிலைப் பள்ளியில் மாணவர்கள் பள்ளிக்கு வராத மாணவர்கள் குறித்து அவர்களின் பெற்றோர் மொபைல் போனுக்கு கம்ப்யூட்டர் மூலம் எஸ்.எம்.எஸ் அனுப்பும் முறை உள்ளது. இந்நிலையில் உங்கள் மகன் பள்ளிக்கு வரவில்லை என ஒரே சமயத்தில் சமார் 2 ஆயிரம் பெற்றோருக்கு எஸ்.எம்.எஸ் அனுப்பப்பட்டதால் பதற்றமடைந்த பெற்றேர் பள்ளி முற்றுகை. | | |
| 614. | 23.2.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமநாதபுரம் வெளிப்பட்டிணம் பாலசுப்பிரமணிய கோவில் தெருவைச் சேர்ந்த குழந்தைச்சாமி மனைவி பாலசுந்தரி(58). ரோந்து போலீஸ் என கூறி 2 மர்ம நபர்கள் ரூ. 11/4 லட்சம் மதிப்புள்ள நகைகளை கொள்ளையடித்துச் சென்றதாக பாலசுந்தரி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 615. | 23.2.2011 | **தேனி மாவட்டம்:** உத்தமபாளையம் அருகே அனுமந்தன்பட்டியில் புனித சூசையப்பர் ஆர்.சி. நடுநிலைப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியை சகாயராணி(49)யிடம் பள்ளியின் தாளாளர் பாதிரியார் பீட்டர் சகாயராஜ்(45) பாலியல் சித்திரவதை கொடுத்ததாக ஆசிரியை புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 616. | 23.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை கோமதிபுரத்தைச் சேர்ந்த முத்துவிஜயகுமார்(52) மேலூர் நீதிமன்றத்தில் பணிபுரிந்து வரும் இவர் ஓய்வு பெற்ற ஆசிரியர் கருப்பையாவிடம் அவரது மகன் மற்றும் மருமகனுக்கு நீதிமன்றத்தில் கிளார்க் வேலை வாங்கித் தருவதாகக் கூறி ரு. 45,000 லஞ்சம் வாங்கியதாகவும், மற்றும் பலரிடம் வழக்குகளை சாதகமாக முடிக்கவும், காண்ட்ராக்ட்டுகள் பெற்றுத்தரவும் நீதிபதிகள் பெயரில் பேரம் பேசியதாக விசாரணையில் தெரிய வந்தது. | லஞ்சம் | தினமணி |
| 617. | 23.2.2011 | **மதுரை மாவட்டம்:** தண்டக்காரன்பட்டியைச் சேர்ந்த மூதாட்டி கமலா(86). மகன் மாரியப்பன் மற்றும் மருமகள் லதா இருவரும் சென்னையில் உறவினர்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்வதாக கூறி மூதாட்டி கமலாவை அழகர்கோயிலுக்கு அழைத்து வந்து சுந்தரராஜ பெருமாள் கோயில் மண்டபத்தில விட்டுச் சென்றதாக மூதாட்டி புகார். | முதியர்வர்கள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 618. | 23.2.2011 | **கோவை மாவட்டம்:** ஆந்திர மாநிலம் கம்மம் மாவட்டத்தைச் சேர்ந்த லட்சுமணன் மனைவி சவ்ஜன்யா(35). கணவர் மற்றும் அவரது அண்ணன், அண்ணன் மனைவி மூவரும் தன்னை துன்புறுத்துவதாக சவ்ஜன்யா புகார். கோவையில் மருத்துவராக பணிபுரியும் 2 மாத கர்ப்பிணியான லட்சுமணனின் அண்ணன் மனைவியை ஆந்திர காவலர்கள் கைது. கர்ப்பிணியை காவலர்கள் கட்டாயப்படுத்தி ரயிலில் ஏற்றியதில் அபார்சன் ஆகி ரத்தப்போக்கு ஏற்பட்டது. | காவல் நிலையச் சித்தரவதை | தினமலர் |
| 619. | 23.2.2011 | **மதுரை மாவட்டம்:** சோழவந்தான், குருவித்துரை, தென்கரை, கச்சிராயிருப்பு ஆகிய பகுதிகளில் வைகை ஆற்றில் மணல் கொள்ளையில் ஈடுபட்ட லாரிகளை அதிகாரிகள் சோதனையின் போது பறிமுதல் செய்தனர். | மணல் கொள்ளை | தினமலர் |
| 620. | 24.2.2011 | **மதுரை மாவட்டம்:** கள்ளிக்குடி அருகே வடக்கம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மராமத்து செய்தவதற்காக பிரிக்கப்பட்ட மேற்கூரை ஓடுகள் 6 மாதம் ஆகியும் பொறுத்தப்படாததால் மாணவர்கள் வெயிலிலும், மழையிலும் நனைந்து அவதி. | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 621. | 24.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை திருநகரைச் சேர்ந்த மனோகர்(51) மகள் தீபிகா(19) அதே பகுதியைச் சேர்ந்த நகாராஜ்(23) இருவரும் காதலித்துத் பெற்றோர் எதிர்ப்பை மீறி திருமணம் செய்தனர். ஆத்திரமடைந்த மனோகர் கூலிப்படையை ஏவி மகளை கொலை செய்ய முயன்றதாக கூட்டாளிகளுடன் மனோகர் மற்றும் பாரதி, ஜெயபிரகாஷ், விஜய் கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தினமலர் |
| 622. | 24.2.2011 | **தேனி மாவட்டம்:** தேனி அரண்மனைப்புதூரைச் சேர்ந்த மேகலா உசிலம்பட்டியைச் சேர்ந்த கார் டிரைவரையைக் காதலித்தார். டிரைவரின் நண்பர், பெரியகுளத்தைச் சேர்ந்த ஈஸ்வரனுடன் மேகலாவுக்கு பழக்கம் ஏற்பட்டது. மேகலாவை, காதலனுடன் சேர்த்து வைப்பதாகக் கூறி பணம் மற்றும் நகைகளை வாங்கி ஏமாற்றியதோடு திருப்பூர் அழைத்துச் சென்று நடுரோட்டில் இறக்கி விட்டதாக ஈஸ்வரன் மீது மேகலா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 623. | 24.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை கோயில்பாப்பாகுடியைச் சேர்ந்த நாகு மகன் முத்து(35) பக்கத்து வீட்டில் வசிக்கும் இரண்டாம் வகுப்பு படிக்கும் சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதோடு கொலை மிரட்டல் விடுத்தாக புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 624. | 24.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை கோவலன் நகரைச் சேர்ந்த ரங்கபாண்டியன் மனைவி அங்காளஈஸ்வரி(31) வாய் பேச முடியாதவர். ரங்கபாண்டியன் இரண்டாம் திருமணம் செய்ததாக குடும்ப நல நீதிமன்றத்தில் அங்காளஈஸ்வரி வழக்குத் தொடர்ந்தார். நீதிமன்றத்திற்கு வந்த அங்காளஈஸ்வரியை ரங்கபாண்டியன் அடித்துச் சித்திரவதை. | பெண்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 625. | 24.2.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** வடசேரி அசம்புரோட்டைச் சேர்ந்த சங்கரன் மனைவி செந்தில்குமாரி மகன் பாலமுருகன் இருவரையும் காணவில்லை என சங்கரன் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 626. | 24.2.2011 | **நாமக்கல் மாவட்டம்:** திருச்செங்கோடு அருகே உள்ள பள்ளிபாளையம் பகுதியில் அதிகாரிகள் சோதனையில் வெடியரசம் பாளையத்தைச் அடுத்த வேட்டுவம்பாளையத்தைச் சேர்ந்த தங்கவேல் வீட்டில் பதுக்கி வைத்திருந்த 50கிலோ கொண்ட 80 மூட்டை ரேசன் கண்டுபிடிப்பு. ரூ. 65 ஆயிரம் மதிப்பு கொண்ட 4 டன் ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தமிழ்சுடர் |
| 627. | 24.2.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் தெற்கு கோட்டையூரில் ஆதிதிராவிடர் பள்ளியில் அறுந்து கிடந்த மின்கம்பியை தொட்ட சிறுமி ஆர்த்தி மரணம். | வகுப்பறை வன்முறை | சன்நியூஸ் சசிகலா |
| 628. | 24.2.2011 | **நாகை மாவட்டம்:** மயிலாடுதுறை நீடூரில் அனுமதி இன்றி மணல் கடத்திய 2 லாரிகள் பறிமுதல். | மணல் கொள்ளை | சன்நியூஸ் சசிகலா |
| 629. | 24.2.2011 | **நாகை மாவட்டம்:** மயிலாடுதுறை அருகே சீழ்காழியில் 2 வயது சிறுமியை கொலை செய்து குட்டையில் வீசிய இளைஞர் கைது. | குழந்தைகள் மீதான வன்முறை | சன்நியூஸ் சசிகலா |
| 630. | 24.2.2011 | **கோவை மாவட்டம்:** காளியாபுரத்தில் தனியார் பொறியியல் கல்லூரி மாணவர் விக்னேஷ் தேர்வில் தோல்வியடைந்ததால் தூக்குப்போட்டுத் தற்கொலை. | மாணவர்கள் மீதான வன்முறை & தற்கொலை | சன்நியூஸ் சசிகலா |

| | | | | |
|---|---|---|---|---|
| 631. | 25.2.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** பாலகிருஷ்ணாபுரம் சாலை சந்திப்பில், கும்மிடிப்பூண்டி காவலர்கள் வாகன சோதனை நடத்தினர். ஆந்திராவில் இருந்து சென்னை புறநகருக்கு அனுமதியின்றி மணல் கடத்திய 2 லாரிகள் பறிமுதல். டிரைவர்கள் ரமேஷ்(32) சுப்பிரமணி(39) கைது. | மணல் கொள்ளை | தினகரன் |
| 632. | 25.2.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** சித்தாமூர் ஒன்றியம் பொறையூர் கிராமத்தில் வசிக்கும் தலித் மக்கள் தாங்கள் நீண்ட காலமாக விவசாயம் செய்து வரும் புறம்போக்கு நிலத்தை பட்டா செய்து தர வேண்டும் என மதுராந்தகம் ஆர்டிஓ அலுவலகம் முன்பு தலித் மக்கள் உண்ணாவிரதப் போராட்டம். | தலித்துகள் மீதான வன்முறை | தினகரன் |
| 633. | 25.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை கண்ணப்பநகர் 8வது வீதியைச் சேர்ந்த ஜெரால்டுபிரிட்டோ மனைவி இமாக்குலேட் ஜெயசீலா(33)வை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 634. | 25.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு கவுந்தப்பாடி பாலப்பாளையத்தைச் சேர்ந்த முருகன்(43) மனைவி கோகிலா(25) குழந்தைகள் ராகுல்ராஜா(6), துர்கா நந்தினி(4). கணவன் மனைவி குடும்பத்தகராறில் மனமுடைந்த கோகிலா குழந்தைகளுடன் காணாமல் போனதாக முருகன் புகார். | பெண்கள் மீதான வன்முறை & குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 635. | 25.2.2011 | **தர்மபுரி மாவட்டம்:** குப்பாகவுண்டர் தெருவைச் சேர்ந்த லட்சுமணம் மகன் மதிவண்ணன்(22), பாலக்கோடு பகுதியைச் சேர்ந்த விசாலாட்சி(19) இருவரும் காதலித்தனர். பெண்ணின் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்ததால் இருவரும் திருமணம் செய்து காவல்நிலையத்தில் தஞ்சம். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 636. | 25.2.2011 | **சேலம் மாவட்டம்:** இடைப்பாடி அருகேயுள்ள எட்டிக்குட்டை மேடு தொப்பவளவு பகுதியைச் சேர்ந்த பழனிசாமி (எ) ராஜா(27) மனைவி கவிதா(24). கவிதா விஷம் குடித்து மரணம். தனது மகள் சாவில் மர்மம் இருப்பதாக கவிதாவின் தாய் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 637. | 25.2.2011 | **அரியலூர் மாவட்டம்:** குன்னம் தாலுகா கொளத்தூர் காலனி தெருவைச் சேர்ந்த பாண்டியன் மனைவி முத்துமாரி(19). கணவன் | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த முத்துமாரி தீக்குளித்துத் தற்கொலை. | | |
| 638. | 25.2.2011 | **அரியலூர் மாவட்டம்:** வாரணவாசியைச் சேர்ந்த வையாபுரி மகள் வளர்மதி(19). குன்னம் தாலுகா கொளத்தூர் காலனி தெருவைச் சேர்ந்த ராபர்ட்(23) இருவரும் காதலித்துத்தனர். தனது மகளை ராபர்ட் கடத்திச் சென்றதாக வளர்மதியின் பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 639. | 25.2.2011 | **ஈரோடு மாவட்டம்:** சத்தியமங்கலம் அருகில் உள்ள கெம்பநாயக்கன்பாளையம் அரசு பள்ளி அருகில் அரசு மதுபானக் கடை திறந்துள்ளது. மாணவர்கள் கல்வி பாதிப்பு. மது குடிப்பவர்கள் மாணவர்களிடம் தகராறு. கடையை அப்புறப்படுத்தக் கோரி மாணவர்கள் போராட்டம். | குழந்தைகள் மீதான வன்முறை | டெக்கான் கிரானிக்கல் |
| 640. | 25.2.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** நத்தம் வட்டம் செந்துரையைச் சேர்ந்த காந்திகுமார்(45) நத்தம் குடிமைப் பொருள் வடட வழங்கல் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக உள்ளார். தனது குடும்பம் மதுரையில் குடியமர்த்துவற்காக குடும்ப அட்டையை மாற்றம் செய்துதரக்கோரி குடிமைப் பொருள் வட்ட வழங்கல் அலுவலர் ராமகிருஷ்ணனை அணுகினார். அவர் ரூ15 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக காந்திகுமார் புகார். | லஞ்சம் | தினமணி |
| 641. | 25.2.2011 | **கோவை மாவட்டம்:** கோவை சட்டக்கல்லூரி மாணவிகள் விடுதியில் தீண்டாமையை கடைபிடிக்கும் பேராசிரியை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய மாணவர் சங்கம் வலியுறுத்தல். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 642. | 25.2.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** வடமதுரை கொம்பேறிபட்டியைச் சேர்ந்த அரசு பேருந்து நடத்துனர் முருகேசன் மனைவி தனலட்சுமி(33). திண்டுக்கல் மாலைப்பட்டி ரோட்டைச் சேர்ந்த குமரேசன்(26)க்கும் தனலட்சுமிக்கும் பழக்கம். இருவருக்கும் ஏற்பட்ட வாய்த் தகராறில் குமரேசன் தனலெட்சுமியை கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 643. | 25.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை இந்து சமய அறநிலையத்துறை உதவி தணிக்கை அதிகாரி சாந்தி, | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சிவனேசனும், பாலகிருஷ்ணனும் தன்னை தரக்குறைவாக பேசியதால் மனஉளைச்சலுக்கு ஆளானதாக அறநிலையத்துறை கமிஷனர் சம்பத்திடம் சாந்தி புகார் மனு. | | |
| 644. | 25.2.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** உளுந்தூர்பேட்டை ஒன்றியம் திருப்பெயர் தக்கா கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் படிக்கின்றனர். மாதிய உணவு சாப்பிட்ட 27 மாணவ, மாணவியர் வாந்தி மயக்கம், உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதி. | வகுப்பறை வன்முறை | தினத்தந்தி |
| 645. | 25.2.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** நிலக்கோட்டை தாலுகா, அணைப்பட்டி அருகே நடுகோட்டையில் அடிப்படை வசதியில்லை. நடுபட்டியைச் சேர்ந்த தலித்துகளுக்கு சுடுகாடு வைகை ஆற்றின் மறுகரையில் உள்ளது. வெள்ளப்பெருக்கு காலங்களில் இறந்த உடலை சுரைக்கூடுகளில் கட்டி கயிறால் இழுத்து மறுகரைக்கு கொண்டு செல்வதாகவும், பலமுறை அதிகாரிகளிடம் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என தலித் மக்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தினகரன் |
| 646. | 25.2.2011 | **நாமக்கல் மாவட்டம்:** பளளிபாளையத்தைச் சேர்ந்த சுரேஷ் மகள் சரண்யாதேவி (21/2 வயது) காணவில்லை. பவானி லட்சுமிநகர் அருகே பூம்பூம் மாட்டுக்கார தம்பதி மணிமாலா அகியோரிடம் மர்ம நபர் ரூ. 200க்கு குழந்தையை விற்றதாகவும் காவலர்கள் குழந்தையை மீட்ட பெற்றோரிடம் ஒப்படைத்தனர். குழந்தையை கடத்திய மர்ம நபரை காவலர்கள் தேடி வருகின்றனர். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | தினமலர் |
| 647. | 26.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அவனியாபுரம் பகுதியில் நெடுஞ்சாலை ரோந்து பணியில் ஈடுபட்ட பெண் சப்–இன்ஸ்பெக்டர் தமிழ்செல்வி, ஏட்டு பழனிக்குமார், டிரைவர் அய்யாபொன்னு இருவரும் வாகனங்களை வழிமறித்து லஞ்சம் வசூலிப்பதாக புகார். அதிகாரிகள் வாகன சோதனையின் போது மூவரிடம் ரூ. பத்து ஆயிரம் பறிமுதல் செய்ததோடு 3 பேரையும் சஸ்பெண்ட செய்ய உததரவு. | லஞ்சம் | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 648. | 26.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னையில் காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும், மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினர் உண்ணாவிரதப் போராட்டம். தலைமைச் செயலகத்தை நோக்கி ஊர்வலம் சென்ற அரசு ஊழியர்கள் மீது காவலர்கள் தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 649. | 26.2.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் சைதாப்பேட்டை கோடையிடி குப்புசாமி முதலியார் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள அங்கன்வாடியில் பணியாளர் வள்ளியும், அமைப்பாளரும் குழந்தைகளை உள்ளே வைத்து வெளிப்பக்கமாக அடிக்கடி பூட்டிச் செல்வதாக புகார். | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 650. | 26.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மாநகராட்சி மேற்கு மண்டலம் 22–வது வார்டு பொன்னகரம் பிராட்வே பகுதியில் அதிகாரிகள் துப்புறவுத் தொழிலாளர்கள் ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். 23–வது வார்டு கவுன்சிலர் கண்ணன், துப்புரவுத் தொழிலாளர்களை சாதியைக் கூறி திட்டியுள்ளார். கவுன்சிலர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என துப்புரவு பணியாளர்கள் போராட்டம். | தலித்துகள் மீதான வன்முறை | தினமணி |
| 651. | 26.2.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை நகரில் இருசக்கர வாகனங்களில் பயணிப்பவர்களிடம் காவல் ஆய்வாளர் இக்பால் பணம் கேட்டு மிரட்டல். | லஞ்சம் | Hindu |
| 652. | 26.2.2011 | **திருநெல்வேலி மாவட்டம்:** நெல்லை வீரகேரளம் புதூர் தாலுகா, தட்டப்பாறை கிராமத்தைச் வசிக்கும் தலித் சமூகத்தைச் சேர்ந்த சுடலைமாடன் மகள் பானுப்பிரியா(15). வகுப்பாசிரியை குகன் திட்டியதால் மனமுடைந்த மாணவி தற்கொலை முயற்சி. பாளை அரசு மருத்துவமனையில் மாணவி சிகிச்சை. | வகுப்பறை வன்முறை | S. கணேசன் (24.2.2011) |
| 653. | 26.2.2011 | **திருநெல்வேலி மாவட்டம்:** நெல்லை ராதாபுரம் தாலுகா, கள்ளிகுலம் கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ். வள்ளியூர் காவலர்கள் சுரேஷ்–ஐ விசாரணைக்கு அழைத்துச் சென்று அடித்துச் சித்திரவதை. நான்குனேரி அரசு மருத்துவமனையில் சுரேஷ் சிகிச்சை. | காவல் நிலையச் சித்தரவதை | S. கணேசன் (24.2.2011) |

| | | | | |
|---|---|---|---|---|
| 654. | 26.2.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** அகஸ்தீஸ்வரம் தாலுகா, வேப்பமூடு அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களை ஆசிரியர்கள் செருப்பை கொண்டு அடித்து சித்திரவதை செய்வதாக புகார். | வகுப்பறை வன்முறை | S. கணேசன் (24.2.2011) |
| 655. | 26.2.2011 | **திருநெல்வேலி மாவட்டம்:** நெல்லூர் அருகே அரவன்பட்டியைச் சேர்ந்த சேர்மணி மகள் முத்தரசு (3 1/2வயது) பாலர் பள்ளியில் பயின்ற குழந்தை முத்தரசியை சேர்மணி கிணற்றில் வீசி கொலை. | குழந்தைகள் மீதான வன்முறை | S. கணேசன் (24.2.2011) |
| 656. | 26.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மேரிஆன் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளியில் கூடுதல் கட்டணம் கட்ட மாணவ/மாணவியர்கள் வற்புறுத்தியதாக புகார். சையது முகமது மகள் ஷால்மியா ஹெஸர் பள்ளி ரேங்க கார்டு காணவில்லை. ஆசிரியை சுமதி மற்றும் பள்ளி முதல்வர் மற்ற மாணவர்கள் முன்னிலையில் ஷால்மியாவை சோதனை. | வகுப்பறை வன்முறை | S. கணேசன் (24.2.2011) |
| 657. | 26.2.2011 | **திருநெல்வேலி மாவட்டம்:** ராதாபுரம் தாலுகா, இடிந்தகரை ஏழையின் கரங்கள் என்ற ஊனமுற்றோர் சங்கத்திடமிருந்து 10,000 பெற்று ஜார்ஜ் என்பவர் மோசடி செய்ததாக புகார். | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | S. கணேசன் (24.2.2011) |
| 658. | 26.2.2011 | **திருநெல்வேலி மாவட்டம்:** ஆலங்குளம் தாலுகா, வெண்ணிலிங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்த ஆசிரியை சொர்ணம் என்பவரை சொத்திற்காக மகன், கணவர் அடித்துச் சித்திரவதை. கொலை செய்ய முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை | S. கணேசன் (24.2.2011) |
| 659. | 27.2.2011 | **சேலம் மாவட்டம்:** கொண்டலாம்பட்டி வித்யாமந்திர் மெட்ரிக் பள்ளி 9ம் வகுப்பு மாணவர் ராகுல். பள்ளியில் இரண்டாவது தளத்திலிருந்து குதித்து மரணம். | வகுப்பறை வன்முறை | டெக்கான் கிரானிக்கல் |
| 660. | 27.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை செல்லூர் அய்யனார் கோயில் 4வது தெருவில் வசிப்பவர் சாரதா(76 ). வீட்டில் தனியாக இருந்த சாரதாவை மர்ம நபர்கள் சேர்ந்து கொள்ளை அடித்ததோடு கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 661. | 27.2.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** குரும்பூர் அடுத்த பணிக்கநாடார் குடியிருப்பு, தனியார் பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவி ஜெயமீனா(15). | வகுப்பறை வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தேர்வில் குறைவான மதிப்பெண் எடுத்ததால் மற்ற மாணவிகள் முன்னிலையில் வகுப்பாசிரியை பிரின்ஸில்லா யூசின்(26) ஜெயமீனாவை திட்டியதோடு அடித்துச் சித்திரவதை. மருத்துவமனையில் தாக்கியதாக காயமடைந்த ஜெயமீனா சிகிச்சை. | | |
| 662. | 27.2.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் அணைக்கட்டு ஒன்றியத்தில், பீஞ்சமந்தை, ஜார்த்தான் கொல்லை, பாலாம்பட்டு உள்ளிட்ட 20 மலைக்கிராமங்கள் உள்ளன. இங்கு வசிக்கம் மக்களுக்கு போதிய சாலை வசதி இல்லை, மற்றும் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் வருவது கிடையாது. 10 – ம் வகுப்பு மாணவர்களுக்கு சாதிச்சான்று கேட்டு விண்ணப்பம் செய்து பல ஆண்டுகள் ஆகியும் சாதிச் சான்று கிடைக்காததால் மாணவர்கள் மேல் படிப்பிற்கு செல்லமுடியவில்லை என கிராம மக்கள் புகார். | வகுப்பறை வன்முறை & பழங்குடியினர் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 663. | 27.2.2011 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகர் சாத்தூர் அருகே உள்ள பந்துவார்பட்டி மற்றும் அச்சங்குளம் கிராமங்களைச் சேர்ந்த தலித் மாணவர்களை சூரார்பட்டி, மற்றும் வெம்பக்கோட்டையைச் சேர்ந்த ஆதிக்க சமூக மாணவர்கள் தாக்கியதில் தலித் மாணவர் சூர்யா காயம். காயமடைந்த 6 தலித் மாணவர்களை காவல் நிலையத்தில் விசாரணைக்கு அழைத்துச் சென்ற காவல் துறை பொய் வழக்கு போட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திவதை | தீக்கதிர் |
| 664. | 28.2.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** செஞ்சி தாலுகா பாலப்பாடியில் உள்ள தனியார் சர்க்கரை ஆலையில், எடையில் தவறு நடப்பதாகக் கூறி சாலைமறியலில் ஈடுபட்ட 150 விவசாயிகள் மீது காவலர்கள் வழக்கு பதிவு. | காவல் நிலையச் சித்திவரவதை | தினமலர் |
| 665. | 28.2.2011 | **மதுரை மாவட்டம்:** ராமநாதபுரத்தைச் சேர்ந்த வீரசேகரன்(50) மனைவி விஜயகுமாரி. கணவன் மனைவி இருவரும் உசிலம்பட்டியில் நடந்த உறவினர் திருமணத்திற்கு சென்றுவிட்டு மதுரை செக்கோஸ்ட் அருகே காரை வழிமறித்த மர்ம கும்பல், வீரசேகரனின் கார் உள்ளிட்ட முன்று கார்களின் கண்ணாடிகளை அடித்து | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நொறுக்கியதோடு விஜயகுமாரியின் கழுத்தில் அணிந்திருந்த 10 பவுன் நகைகளை பறித்துச் சென்றதாக புகார். | | |
| 666. | 28.2.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மாவட்டத்தில் கடந்த ஓராண்டில் அதிகாரிகள் நடத்திய சோதனையில் 4,500 குவிண்டால் ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |